இனிமையான குழந்தைகளே! நீங்கள் படிப்பின் மீது மிகுந்த மரியாதை வைக்க வேண்டும், நோயாளியானாலும், இறக்கும் தருவாயிலும் வகுப்பில் அமருங்கள், ஞான அமிர்தம் வாயில் இருக்கும் பொழுது உயிர் பிரிய வேண்டும் என்று கூறப்படுகிறது.

கேள்வி: சில குழந்தைகளும் தந்தையிடமிருந்து முகத்தை திருப்புவதற்கு பொறுப்பானவர்களாக ஆகிவிடுகின்றனர் லி எப்போது? எப்படி?

பதில்: யார் தங்களுக்குள் சகோதர, சகோதரிகளுக்குள் கோபித்துக் கொண்டு படிப்பை விட்டு விடுகிறார் களோ மற்றும் சத்குருவை நிந்திப்பவர்களாக ஆகிவிடுகிறார்களோ அவர்களைப் பார்த்து பலர் தந்தையிடமிருந்து முகத்தை திருப்பிக் கொள்கின்றனர். இன்று நன்றாகப் படிக்கின்றனர், நாளை படிப்பை விட்டு விடுகின்றனர் எனில் நீங்கள் படியுங்கள் என்று மற்றவர்களுக்குக் கூற முடியாது. இப்படிப்பட்ட குழந்தைகள் உயர்ந்த பதவி பெறுவதிலிருந்து வஞ்சிக்கப்பட்டு விடுகின்றனர்.

பாடல்: கூட்டத்தில் ஒளி எழுந்தது விட்டில் பூச்சிகளுக்காக.......

ஓம்சாந்தி. பாட்டின் பொருளை குழந்தைகள் புரிந்து கொண்டீர்கள், யார் இந்த பாட்டை உருவாக் கினார்களோ அவர்கள் அதன் பொருளை அறியவில்லை. எவ்வளவு வேதம், சாஸ்திரம், உபநிடதங்களை உருவாக்குகின்றனர் பாருங்கள்! ஆனால் ஒருவர் கூட யதார்த்த பொருளை அறிந்திருக்கவில்லை. யதார்த்த பொருளை அறியாத காரணத்தினால் நேரத்தை வீணாக்குகின்றனர், பணத்தையும் வீணாக்குகின்றனர். நீங்கள் அதிக கோயில், வேதம், உபநிடதம் போன்றவைகளை உருவாக்கியிருக்கிறீர்கள் என்று தந்தை புரிய வைக்கின்றார். யக்ஞம், தவம், ஜபம் செய்திருக்கிறீர்கள். எவ்வளவு செல்வத்தை செலவழித்திருக்கிறீர்கள்! இதை தந்தை யாருக்கு புரிய வைக்கின்றார்? யார் உயிருடன் இருந்து கொண்டே தந்தையினுடையவர்களாக ஆகியிருக்கிறார்களோ! அவர்களுக்கு நீங்கள் தந்தையினுடையவர்களாக ஆகியிருக்கிறீர்கள் எனில் உயிருடன் இருந்து கொண்டே இறந்திருக்கிறீர்கள். எனவே இப்போது தந்தையின் கூடவே செல்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அங்கு நீங்கள் உங்களது பிறந்த நாள் அல்லது திதி கொண்டாடுவீர்கள் என்பது கிடையாது. இங்கு காந்திக்கு எவ்வளவு விமரிசையாக கொண்டாடுகின்றனர்! சிவபாபா ஞானம் கொடுத்து சென்று விடுவார், பிறகு நீங்கள் சத்யுகத்தில் அவருக்கு ஜெயந்தி கொண்டாடுவீர்கள் என்பது கிடையாது. அரைக்கல்பத்தில் யாரெல்லாம் சரீரம் விடுவார்களோ அவர்களுக்கு திதி செய்யமாட்டீர்கள். பசு தானம் (கௌதான்) செய்வது, மூதாதையர்களுக்குப் படைப்பது போன்றவைகள் இருக்காது. ஏனெனில் அடுத்த பிறவியில் பலன் கிடைக்கும் என்பதற்காகத் தான் தானம் கொடுக்கப்படுகிறது. சத்யுகத்தில் நீங்கள் இந்த நேரத்திற்கான பலனை அனுபவிக்கிறீர்கள். ஆக பக்தியின் வழக்கத்திற்கும், ஞானத்தின் வழக்கத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. விசாலபுத்தியுடையவர்கள் இந்த விசயங்களைப் புரிந்து கொள்வர், மேலும் யார் கல்பத்திற்கு முன்பு விசாலபுத்தியுடையவர்களாக ஆகியிருந்தார்களோ அவர்கள் தான் இப்போதும் ஆவார்கள். ஏனெனில் மீண்டும் அதே பாகம் நடிக்க வேண்டும்.

நாலாபுறமும் சுற்றி வந்தீர்கள், இருப்பினும் முற்றிலும் தூரமாகவே இருக்கிறீர்கள் ...... என்று பாட்டு கேட்டீர்கள். நீங்கள் பக்தி மார்க்கத்தில் தலையை எவ்வளவு உடைத்துக் கொள்கிறீர்கள் ((முயற்சி), இருப்பினும் என்னை சந்திக்க முடியவில்லை. ஏனெனில் நான் வரும் போது தான் என்னை சந்திக்க முடியும். கல்ப கல்பம் சங்கமயுகத்தில் தான் நான் வருகிறேன். பரமாத்மா யுகத்திற்கு யுகம் வருவதாக மனிதர்கள் கூறிவிட்டனர். பிறகு பரமாத்மா 24 அவதாரங்கள் எடுப்பதாக கூறி விட்டனர். ஆக இது தவறு அல்லவா! பதீத பாவனனே வாருங்கள், வந்து தூய்மையில்லாதவர்களை தூய்மை ஆக்குங்கள் என்று என்னை அழைக்கிறீர்கள். ஆக இப்போது நீங்கள் மாயை, இராவணனுடன் யுத்தம் செய்கிறீர்கள். உங்களுடையது எந்த ஸ்தூல யுத்தமும் கிடையாது. நீங்கள் இராவணன் மீது வெற்றி அடைகிறீர்கள். அதிலும் முக்கிய போர் வீரன் யார்? காமம். ஆக இந்த விகாரத்தின் மீது வெற்றி அடைய வேண்டும், அதாவது தூய்மையாக ஆக வேண்டும். சுயம் தூய்மையாக ஆகின்ற போது குழந்தைகளையும் தூய்மையாக ஆக்க வேண்டும். அதாவது அவர்களும் உலகிற்கு எஜமானர் களாக ஆக வேண்டும். ஒருவேளை இப்போது நீங்கள் அவர்களுக்கு ஆஸ்தி கொடுக்கின்றீர்கள் எனில் என்ன கொடுப்பீர்கள்? அழிந்து போகக் கூடிய கல், மண் அல்பக் காலத்திற்கு கொடுப்பீர்கள். நல்லது, அமெரிக்காவைப் பாருங்கள், அது என்னது? உடைந்த மண் பாண்டத்தின் துண்டு அல்பக் காலமானது. ஏனெனில் இப்போது அனைத்தும் அழியப் போகிறது. எப்படி இறப்பார்கள் என்பதை பார்ப்பீர்கள். மலையின் மீது பனிகட்டி புயல் வரும் போது பறவை போன்றவைகள் அனைத்தும் இறந்து விடுகிறது. ஆக இந்த அணுகுண்டின் புயலும் இப்படிப்பட்டது தான். கொசுக்களைப் போன்று இறந்து கொண்டே இருப்பார்கள். எப்படியெல்லாம் அனைவரும் இறந்து கொண்டிருக்கின்றனர் என்பதை நாம் பார்ப்போம் என்பதை நீங்கள் அறிவீர்கள். யுத்தத்தில் எவ்வளவு பேர் இறக்கின்றனர்! இங்கு அனைவரின் தலையில் மரணம் இருக்கிறது. சத்யுகத்தில் மரண பயம் கிடையாது. ஏனெனில் அங்கு அகால மரணம் ஏற்படாது. ஆக தந்தை அப்படிப்பட்ட உலகிற்கு அழைத்துச் செல்கிறார். அப்படிப்பட்ட தந்தையின் ஸ்ரீமத் படி நடக்க வேண்டும். இவர் சுப்ரீம் ஆசிரியராகவும் இருக்கின்றார், ஆகவே, குழந்தைகள் படிப்பின் மீது முழு கவனம் செலுத்த வேண்டும். பலருக்கு படிப்பின் மீது மரியாதை கிடையாது. சிலர் நோயாளியாக இருப்பர், இறக்கும் தருவாயில் இருப்பர் என்று வைத்துக் கொள்ளுங்கள், அவர்களையும் வகுப்பிற்கு அழைத்து வர வேண்டும். வாயில் ஞான அமிர்தம், இருக்கட்டும். கங்கை கரை அருகில் இருக்கும் ...... உயிர் உடலிலிருந்து நீங்க வேண்டும். ஆக படிப்பிற்கு அந்த அளவிற்கு மரியாதை கொடுக்க வேண்டும். வேறு வழியில்லையென்ற சூழ்நிலையில், வகுப்பிற்கு அழைத்து செல்ல முடியவில்லை யெனில் அவருக்கு வீட்டிலேயே சிவபாபாவின் நினைவு ஏற்படுத்த வேண்டும். ஆனால் குழந்தைகளுக்கு படிப்பின் மீது முழு கவனம் கிடையாது. ரிசல்ட் கொண்டு வரும் போது யார், எந்த அளவிற்கு படிக்கிறார்கள் என்பது எனக்கு தெரியும் என்று பாபா கூறுகின்றார். சுயம் படித்து மற்றவர்களுக்கும் கற்பிக்கிறாரா? என்று பாபா கேட்கின்றார், ஏனெனில் இந்த தொழிலில் தான் வருமானம் இருக்கிறது. மற்ற அனைத்து தொழிலும் தூசி போன்றது. அந்த பிராமணர்களின் கச்சத்தில் (உடுத்தியிருக்கும் வேட்டி மடிப்பில்) பொய் இருக்கிறது, உங்களிடத்தில் சத்தியம் இருக்கிறது. நீங்கள் சத்தியமான கண்டத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறீர்கள். உங்களிடத்தில் மிகப் பெரிய பொறுப்பு இருக்கிறது.

ஆகையால் எச்சரிக்கையுடன் இருங்கள். படிப்பது மற்றும் கற்பிப்பதில் முயற்சி இருக்கிறது. படிப்பதோடு மட்டும் இருந்து விடக் கூடாது. நீங்கள் இல்லற மார்க்கத்தில் இருக்கக் கூடியவர்கள், 8 மணி நேரம் வீட்டு வேலை செய்யுங்கள். அரசாங்கமும் 8 மணி நேரம் வேலை செய்ய ஆணை பிறப்பிக்கிறது. முன்பு கப்பல் வெளியிலிருந்து இரவில் வருகின்ற போது முழு இரவும் கடையை திறந்து வேலை செய்தனர். நீங்களும் வீட்டு வேலையிலிருந்து விடுபட்டு இந்த சேவையில் ஈடுபட வேண்டும். சேவை செய்ய சுயம் அரசாங்கம் கற்றுக் கொடுக்கிறது. உண்ண உணவு குடிநீர் கொடுக்கின்றனர், அவர்களுக்கு சேவையும் செய்கின்றனர். இங்கும் தந்தை உங்களுக்கு கற்றுக் கொடுக்கின்றார் எனில் நீங்கள் இறை சேவை செய்ய வேண்டும். சேவை மட்டுமே செய்து விடக் கூடாது. அது மட்டுமே என்று கூறுவது தனது புத்திக்கு, தன்னை தூய்மையாக்கிக் கொள்வதாகும். ஆனால் நாம் பாரதத்தை சொர்கமாக ஆக்க வேண்டும். அந்த சேனையிடம் அதிக பொறுப்பு இருப்பது போன்று உங்கள் மீதும் அதிக பொறுப்பு இருக்கிறது. முதன்மை கமாண்டர், கேப்டன் போன்றவர்களின் மீது அதிக பொறுப்பு இருக்கிறது. இங்கும் அவ்வாறு இருக்கிறது. சென்டர் திறக்கக் கூடிய நல்ல நல்ல குழந்தைகள் கமாண்டர்களாக ஆகிவிடுகின்றனர். ஆக அவர்கள் மீது பொறுப்பு இருக்கிறது. நான் சேவைக்குப் பதிலாக எந்த தீங்கும் செய்யவில்லை தானே? என்று ஒவ்வொருவரும் பார்க்க வேண்டும். பல குழந்தைகள் சகோதர, சகோதரிகளிடம் கோபித்துக் கொண்டு படிப்பை விட்டு விடுகின்றனர். படிப்பை விட்டு விடும் போது சத்குருவை நிந்திப்பவர்கள் நிலைத்திருக்க முடியாது அதாவது சத்யுகத்தில் உயர்ந்த பதவி அடைய முடியாது என்பதை புரிந்து கொள்வது கிடையாது. இங்கு தந்தை குழந்தைகளின் ரிஜிஸ்டர் கேட்கின்றார், அதன் மூலம் புரிந்து கொள்கின்றார். பள்ளிகளில் இந்த குழந்தை எந்த அளவு படித்திருக்கிறது என்பதை தந்தை, ஆசிரியர் ரிஜிஸ்டர் மூலம் புரிந்து கொள்கின்றனர். சில குழந்தைகள் முழு நாளும் விளையாடிக் கொண்டே இருப்பர், விடுமுறை நாட்களில் நான் படித்து விட்டு வருகிறேன் என்ற கூறி வீட்டிற்கு வந்து விடுவர். அவர்களது தாய், தந்தை ரிஜிஸ்டர் பார்ப்பதே கிடையாது எனும் போது அவர்களுக்கு தெரியாமல் போய் விடும். சிலரது தாய், தந்தைமார்கள் கவனம் கொடுக்கின்றனர் எனில் குழந்தைகள் நன்றாகப் படிக்கின்றனர். இங்கு சிவபாபா அந்தர்யாமியாக இருக்கின்றார். சாகாரமானவருக்கு ரிஜிஸ்டர் காண்பிக்க வேண்டியிருக் கும். பாபா, இவ்வாறு புயல்கள் வருகின்றன என்று குழந்தைகள் கூறுகின்றனர். இந்த புயல்கள் வரத்தான் செய்யும் என்று பாபா கூறுகின்றார். இது போன்ற புயல்கள் முதலில் என்னிடத்தில் தான் வருகின்றன, ஏனெனில் எதுவரை இவருக்கு அனுபவம் ஏற்படவில்லையோ பிறகு குழந்தைகளுக்கு எப்படி புரிய வைக்க முடியும்? சரி, உங்களை மாயை முழு இரவும் தொந்தரவு செய்தது, தூங்க விடவேயில்லை, நேரத்தையும் வீணாக்கி விட்டது. இதுவும் அதன் கடமையாகும், அவசியம் சண்டையிடும். ஆனால் குழந்தைகளாகிய உங்களது கடமை என்னவெனில் தந்தையை நன்றாக நினைவு செய்து மாயாவை விரட்டி விட வேண்டும். சில குழந்தைகள் சிறிது மாயை வந்ததும் சென்று விடுகின்றனர். இந்த மருந்து சாப்பிட்டால் வியாதி குறைந்துவிடும் என்று வைத்தியர்கள் கூறுவர். ஆனால் சிலர் வியாதி குறையவில்லையெனில் இந்த வைத்தியரை விட்டு விட்டு மற்றொருவரிடம் சென்று விடுகின்றனர். இங்கும் அவ்வாறு இருக்கிறது. ஞானத்தை விடுத்து சாது, சந்நியாசிகளிடம் சென்று விடுகின்றனர். பிறகு இல்லற விவகாரத்தில் இருங்கள், திருமணம் செய்து கொள்ளுங்கள் என்று

அனைவரும் கூறுகின்றனர் என்று சொல்வர். திருமணம் செய்து கொண்டு தூய்மையாக இருங்கள் என்று நீங்கள் கூறுகிறீர்கள். பிறகு இதில் என்ன கஷ்டம் இருக்கிறது! அரே! நாம் இல்லறத்தில் இருந்து கொண்டே இராஜா ஜனகரைப் போன்று ஜீவன்முக்தி அடைய வேண்டும் என்று நீங்கள் கூறுகிறீர்கள். பிறகு இல்லறத்தில் தூய்மையாக இருக்க வேண்டும். இந்த விசயம் சரியானது தான் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் இலட்சியம் உயர்ந்தது. இவ்வாறு கூறி பயந்து விடுகின்றனர். உயர்ந்த நிலை அடைந்தே ஆக வேண்டும் அல்லவா! தில்வாலா கோவிலில் கீழே தபஸ்யா செய்து கொண்டிருக்கின்றனர், மேலே அதற்கான பலனாக சொர்க்கம் இருப்பதாக காட்டப்பட்டுள்ளது. எனவே இலட்சியம் உயர்வானது தான்! முன்னேறினால் ஒரேயடியாக வைகுண்டம் வரை முன்னேறுவது, இல்லையெனில் துண்டு துண்டாக கீழே விழுந்து விடுகின்றனர். ஆகையால் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டி யிருக்கிறது. பயப்படக் கூடாது.

இது கீதையில் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று கூறுகின்றனர். இன்று கீதைகள் பல உள்ளன. தாகூர் கீதை, காந்தி கீதை போன்று ....... இன்றைய நாட்களில் யார் வீட்டில் கோபித்துக் கொள்கிறார்களோ அதை கீதையின் (கூறப்பட்ட) பொருளாக ஆக்கி விடுகின்றனர். மேலும் அதில் தனது பெயரை வைத்து விடுகின்றனர். கத்திரிக்காய் சாப்பிட்டால் இப்படி ஆகும், வெண்டைக்காய் சாப்பிட்டால் இது நடக்கும் ...... இந்த பாபாவும் தினமும் கீதையின் பாடத்தை படித்து வந்தார். எங்கு சென்றாலும், இராஜாக்களிடம் சென்றாலும் அவசியம் கீதை படித்தார். பக்தர்கள் ஏமாற்றமாட்டார்கள் என்று மனிதர்கள் நினைக்கின்றனர். ஆனால் பக்தர்கள் எந்த அளவிற்கு ஏமாற்றுகிறார்களோ அந்த அளவிற்கு வேறு யாரும் இருக்க மாட்டார்கள். ஆக குழந்தைகளே! படிப்பை விட்டு விடாதீர்கள் என்று பாபா கூறுகின்றார். இல்லையெனில் மாயை என்ற முதலை சாப்பிட்டு விடும், பிறகு வருத்தப்பட வேண்டியிருக்கும். தர்மராஜபுரியில் ஒவ்வொரு பிறவியின் சாட்சாத்காரம் செய்து தண்டணை அடையும் போது அதைப் பற்றி கேட்கவே கேட்காதீர்கள். முக்தி, ஜீவன்முக்தியை எந்த மனிதனும் அறிந்திருக்கவில்லை. ஏனெனில் சுகம் காக்கை எச்சத்திற்கு சமமானது என்று அவர்கள் நினைக் கின்றனர். ஆக சொர்க்கத்தின் சுகமும் இப்படித் தான் இருக்கும் என்று நினைக்கின்றனர். ஏனெனில் திரேதா யுகத்திலும் சீதை அபகரிக்கப்பட்டாள் எனில் அதுவும் துக்கம் ஆகிவிடுகிறது. சொர்க்கத்தில் இப்படிப்பட்ட விசயங்கள் கிடையாது என்பதை இப்போது நீங்கள் அறிவீர்கள். இது பாரதத்தின் கதையாகும். மற்றபடி மற்ற தர்மத்தினர்கள் இந்த நாடகத்தின் கிளை கதையில் வருபவர்கள். பாரதவாசிகள் தான் 84 பிறவிகள் எடுக்கின்றனர், மற்ற தர்மத்தினர்கள் 84 பிறவிகள் எடுப்பது கிடையாது. ஆத்மா பரமாத்மாவைப் பிரிந்து பல காலம் ஆகிவிட்டது ..... என்று கூறுகின்றனர். பாடிக் கொண்டே இருக்கின்றனர், அறிந்து கொள்வது எதுவும் கிடையாது. இந்த பிரம்மாவும் யாசிப்பவராக இருந்தார் அல்லவா! இவரும் பலரை குருக்களாக கொண்டிருந்தார். ஆனால் அனைவரும் ஏமாற்றக் கூடியவர்கள். அதனால் தந்தை கூறுகின்றார் லி சர்வ தர்மானி பரிதஜ்ய அவர்களுக்கு இதன் பொருள் தெரியாது. கீதையை படிக்கின்றனர், ஆனால் காட்டு கிளியை போன்று இருக்கின்றனர். நீங்கள் மணியாகி வெற்றி மாலையில் வந்து விடுவீர்கள். உலகத்தினர்கள் இந்த விசயங்களை எப்படி அறிந்து கொள்ள முடியும்! நீங்கள் அவர்களுக்கு புத்தகம் கொடுத்தால் எறிந்து விடுகின்றனர்.

அவர்களுக்கு ஞான இரத்தினங்களைப் பற்றி என்ன தெரியும்! கல்பத்திற்கு முன்பு தேவதா தர்மத்தில் இருந்த குழந்தைகளாகிய நீங்கள் தான் இப்போது பிராமணர்களாக ஆகியிருக்கிறீர்கள். யார் இப்போது தேவதைகளாக ஆவார்களோ அவர்களே கல்ப கல்பத்திற்கும் வரிசைக்கிரமமான முயற்சியின் படி தேவதைகளாக ஆவார்கள், மற்றவர்கள் தேவதைகளாக ஆக முடியாது. இந்த நாற்று நடப்பட்டுக் கொண்டிருக்கிறது அல்லவா! அந்த அரசாங்கம் முட்களின் நாற்று நட்டுக் கொண்டிருக்கிறது. இங்கு பாண்டவ அரசாங்கம் தேவதா தர்மத்திற்கான நாற்று நடுகிறது. எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது! தேவதா தர்மத்தின் நாற்று நடுவது எப்போது முழுமை அடைந்து விடுமோ அப்போது இந்த பழைய உலகம் விநாசம் ஆகிவிடும். ஆக விநாசத்தின் அறிகுறிகளை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் லி நாடகப்படி யாதவர்கள் மற்றும் கௌரவர்கள் எப்படி சண்டையிட்டுக் கொள்கின்றனர், எதுவும் புதிதல்ல. எதுவும் புதிய விசயம் கிடையாது. இல்லையெனில் இரத்த நதி பாயும் என்று ஏன் கூறியிருக்கின்றார். எந்த இந்துக்களும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளமாட்டார்கள். இந்த யுத்தமே யாதவர்கள் மற்றும் கௌரவர்களுக்கானது. மேலும் நாமும் இந்த யுத்தத்தில் இருக்கிறோம். யுத்தம் சரியான முறையில் நடந்து கொண்டிருக்கிறதா? இல்லையா? எந்த துரோகிகளும் இல்லை தானே? என்று அந்த கமாண்டர் பார்த்துக் கொண்டிருப்பார் அல்லவா! துரோகிகளுக்கு மிகப் பெரிய தண்டனை கிடைக்கும். இங்கும் அவ்வாறு இருக்கிறது. யாராவது தந்தையினுடையவராகி துரோகி ஆகிவிட்டால் தர்மராஜபுரியில் மிகப் பெரிய தண்டனை கிடைக்கும். குழந்தைகள் சாட்சாத்காரமும் செய்திருக்கின்றனர். காசியில் பலியாகின்ற பொழுது அந்த நேரத்தில் பல பிறவிகளின் பாவ தண்டனைகளை அனுபவிப்பர். பிறகு அடுத்த பிறவியில் புதிதாக கர்மம் ஆரம்பமாகி விடும். முக்திக்கு யாரும் செல்வது கிடையாது. இன்னார் நிர்வான்தாமத்திற்கு சென்று விட்டதாக கூறுகின்றனர். ஆனால் யாரும் செல்வது கிடையாது. பதீத பாவனனே வாருங்கள் என்று தந்தையை அழைக் கின்றனர். அனைவருக்கும் சத்கதி கொடுக்கும் வள்ளல் ஒரே ஒருவர் ஆவார். இது புரிந்து கொள்ள வேண்டிய விசயம் அல்லவா! தந்தை வருகின்றார் எனில் பலருக்கு கதி, சத்கதி கொடுத்து விட்டு செல்கின்றார். தூய்மையாக ஆகுங்கள் என்று பரமாத்மா இப்போது கட்டளை பிறப்பித்திருக்கின்றார். உலகம் எப்படி இயங்கும்? என்று கேட்கின்றனர். அரே, சாப்பிடுவதற்கு கிடையாது, பிரஜைகள் குறைய வேண்டும் என்று நீங்கள் தான் கூறுகிறீர்கள், பிறகு உலகம் எப்படி இயங்கும் என்று கேட்கிறீர்கள். குழந்தைகளாகிய நீங்கள் நல்ல முறையில் புரிய வைக்க வேண்டும். நல்லது.

இனிமையிலும் இனிமையான, தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாய் தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) வீட்டு வேலைகள் செய்தாலும் நேரம் ஒதுக்கி ஆன்மீக சேவை அவசியம் செய்ய வேண்டும். சேவை அதிகப்படுத்துவதற்கு நான் பொறுப்பாளி என்று புரிந்து கொள்ள வேண்டும். சேவைக்குப் புறம்பான காரியங்கள் செய்யக் கூடாது.

2) கற்பிப்பவர் சுயம் சுப்ரீம் ஆசிரியர் ஆவார், ஆகையால் படிப்பின் மீது அதிக

மரியாதை வைக்க வேண்டும். எந்த சூழலிலும் படிப்பைத் தவற விடக் கூடாது.

வரதானம் : ஒருமுகத்தன்மையின் பயிற்சி மூலம் மனம்லிபுத்தியை அனுபவங்களெனும்
ஆசனத்தில் நிறுத்துபவராகி தடைகளற்றவராகுக
ஒருமுகத்தன்மை எனும் சக்தி சுலபமாகவே தடைகளற்றவராக்குகிறது. இதற்காக மனம்லிபுத்தியை ஏதேனும் ஒரு அனுபவமெனும் இருக்கையில் (சீட்) அமர்த்துங்கள். ஒருமுகமான சக்தி இயல்பாகவே ஒரு தந்தையின்றி வேறுயாருமில்லை என்ற அனுபவம் செய்விக்கும். இதனால் சுபலமாகவே ஏக்ரஸ் நிலை பெறும். அனைவருக்காகவும் நன்மை செய்யும் உணர்விருக்கும். ஒருமுகப் பயிற்சியால் சகோதர சகோதார பார்வை இருக்கும். அதனால் ஒருபோதும் ஏதேனும் பலவீனமான சம்ஸ்காரமோ, எந்தவொரு ஆத்மா மற்றும் இயற்கையின் மூலமாக இராயலான ரூபத்தில் மாயை மனதை அலைகழிக்காது.

சுலோகன்: நொடியில் விஸ்தாரத்தை சாரத்தில் உள்ளடக்கும் பயிற்சியே

இறுதிச் சான்றிதழ் பெற்றுத் தரும்.